## பத்திரிக்கைச் செய்தி

## கொள் முதலுக்கான நெல் முட்டைகளை எடையிட லஞ்சம் வாங்கிய மேஸ்திரி (தலைமை சுமை தூக்குபவர்) கைது

புகார்தாரர் திரு.முகுந்தன், வழக்கறிஞர், சிதம்பரம் தாலுகா, கடலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர், அரசு நேரடி கொள்முதல் மையம், சிதம்பரம் தாலுகா அலுவலகத்தில் 450 நெல் மூட்டைகளை எடை போட்டு விற்பனை செய்வதற்கு சென்றுள்ளார். அங்கு வேலை செய்யும் மேஸ்திரி திரு.தியாகராஜன் என்பவர் மேற்படி 450 நெல் மூட்டைகளை எடை போட்டு 450 நெல் மூட்டைகளை எடை போட்டு எடுத்து கொள்ள தனக்கு ரூ.25,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். மேற்படி லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 23.02.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது பொது ஊழியரான திரு.தியாகராஜன், மேஸ்திரி, (தலைமை சுமை தூக்குபவர்) அரசு நேரடி கொள்முதல் மையம், சிதம்பரம் தாலுகா, கடலூர் மாவட்டம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.25,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.